பதிவு நம்பர் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா, வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 | |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 | |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 | |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மலர் 4 | ஈரோடு, விபவ ஞு கார்த்திகை மீ 17உ (2—12—28) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 32



R E V O L T

## 'ரிவோல்ட்'

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஓர் ஆங்கிலப்பத்திரிகை.

வருட சந்தா ரூ. 4.
வெளி நாட்டுக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—
ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
S. ராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—
மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

R E V O L T



குறைந்த விலை! குறைந்த விலை!!

இன்னும் ஒரே மாதம் வரையில்!
கியாதி பெற்றதும் இந்தியாவில் ஏராளமாகச் செலவானதுமான

## பாக்கெட் டிடக்டிவ்
அல்லது
## வீ பாக் ராஸ் கோப்.

என்னும் நூதன அமெரிக்கக் கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம்.

இக்கருவியினால் திரும்பிப்பாராமலேயே உங்கள் பின்னே நடப்பதைத் தெரிந்து கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவள் தெரிந்து கொள்ளாமலேயே அறிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இத்துடன் நான்கு லீலா விநோத பிரஞ்சு போட்டோக்கள் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1—4—0. ஏககாலத்தில் உள்நாட்டிலிருந்து இரண்டு கருவிகள் தருவித்தால் தபால் செலவில்லை.

தி. பான்வல் வாட்சு அவுஸ், மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



பிக்டோரியல் கம்பெனி,




149 பிராட்வே, சென்னை.


சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பராதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.


## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.



## 'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் சுற்றுண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| அயல் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,, 18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

## திருப்பூர் பனியன்ஸ்,

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR (S. India.)

## பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு, லேபில்களுக்கும், இன்னும் இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கபடுவது


உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனும்.

ஜான் பிரான்சீஸ், சொந்தக்காரர்
பாஸ்டியன் ஸ்டுடியோ
173. போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

## டேபில் டைம்பீஸ் இனும்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகி றவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபின் டயம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முக்தங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜினான் வாட்சு கம்பெனி,
பின்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மேடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

8 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பின் பாக்கெட் ரூ 2 10 சாம்பின் பாக்கெட் ரூ 1-4-0, நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
வெட்டர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

# அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ-ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை, கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான்; இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனும்.

சி, இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

## மும்மணிகள்

அன்பர்களே!

நீங்கள் கொடுக்கும் காசுக்கு மண்டலக்கணக்கல்ல மாதக்கணக்கல்ல மணிக்கணக்கல்ல அந்த க்ஷணமே கைமேல் பலன்-

ஒரு மணி:- மூட்டப்பூச்சிகளுக்கு எமன். எந்த சந்துகளில் ஆயிரக்கணக்கான மூட்டப்பூச்சிகள் குடியிருந்துகொண்டு இரவு பகல் குழந்தைகள் முதல் யாவருடைய ஜீவனையும்உறிஞ்சும் கொடிய பூச்சிகளுள்ள விடங்களில் இந்த மருந்துபட்ட க்ஷணமே அவ்வளவும் சாகிறது

2 அவு. பாட்டல் 1க்கு ரூ 1—0—0

மறு மணி:- சகலதேள் விஷத்திற்கு எமன். உச்சலிங்கத்தேள் வாதத்தேள் பித்தத்தேள் சிலேஷ்மத்தேள் நண்டுவாய்க்காளி இவைகள் கடித்த இடத்தில் கோட்டையில் கண்டப்டி சுடிவாயில் மருந்தைப் போட்டு உடன் புகையைப் பிடிக்க அந்த க்ஷணமே எப்பேர்ப்பட்ட தேள்களின் விஷமும் ஓடுவதைப்பார்க்கலாம் தேள் கொட்டின விடத்தில் வீக்கம், மேல்சுவாசம், அறிவு நீங்குதல், வாந்தி முதலிய வைகளை தடுக்கும். விபரங்களடங்கிய நோட்டீசும் மருந்துடன் வரும்.

3 பாட்டல் ரூ 1—0—0

மும்மணி:- சஞ்சீவிப்புகை வருஷக்கணக்காயிருக்கும் எவ்வித தலைவலிக்கும் புடணி இடுப்பு திரேகத்தில் எவ்வித வலிக்கும் இத்தப்புகையைப் பிடித்தால் அத்தப்பொல்லா வேதனை நீக்கும் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளிகள் உத்தியோகஸ்தர்கள் முதலிய அதிகவேலையுள்ள சனவான்களை தட்டி எழுப்பி ஜரூராய் வேலைகளை பார்க்கச்செய்கிறது. திரி 2 க்கு ரூ 1—0—0

எல்லா விபரங்களும் மருந்துடன் வருகிறது.

க. வெ. வேலுமயில், மயிலர் திருமாளிகை,
சாங்கயம், தென் இந்தியா

## ஆனந்த விகடன்!

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0

மாதிரிகாப்பி இனும்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை-

## மதனுகமம்.

(புதுச்சேரி பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிடலீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர்-பெற்ற பிரஞ்சிந்தியா வே முதன்மை வாய்ந்த தென்பது யாம் கூறுமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ 1—0—0.

வஸந்த நிலையம். ரங்கப்பிள்ளை வீதி புதுச்சேரி.


கடவுளை வணங்க
பார்ப்பனத் தரகர்வேண்டுமோ?

# பண்டிதர்களுக்குப் பகை அவர்கள் படிப்பேயன்றி "குடி அரசு" அல்ல.

4-ம் கட்டுரை

## கைவல்ய சாமியார் எழுதுவது.

அறிவு மனிதருக்கெல்லாம் பொதுவென்பதை உலகமுழுவதும் ஒப்புக்கொள்ளுகிறது. இந்த மாகாணத்தில் சாஸ்திரப்பண்டிதர்கள் எக்காரணத்தால் அக்கொள்கையை அங்கீகாரம்பெற விடுவதில்லையென்ற இக்கேள்விக்குச் சமாதானம் சொல்லுங்கள், அப்பொழுது நீங்கள் படித்த சாஸ்திரத்தையும் உலகசமயத்தின் நேர்மையையும். உங்கள் அருமையினால் உண்டான மௌட்டீகம் சமய உண்மைகளை உங்களிடம் மறைத்து அறியாமையின் பற்றுதலை அதிகமுண்டாக்கிவிட்டதையும் உலகம் தெரிந்துகொள்ளும். நாம்புறத்தே ஓரதிகாரத்தை எப்போதும் குருட்டுத்தனமாக நம்பித் தொங்கும் குணம் நம்முடைய ஊக்கத்தை வேரறுக்கிறது. இப்படி எங்கும் சூழ்ந்த பயமானது நம் அறிவையும் உள்ளத்தையும் வசப்படுத்தியிருப்பதால் பண்டிதர்கள் மனமும் கோழைப்பட்டு அவர்கள் பரப்பின கோழைத்தனமே நாடெல்லாம் பரவிவிட்டது. இதனால் வந்தபயன் என்னவென்றால் உலகமுழுதும் தழுவிய மாற்றொணாத ஸர்வ விதியை நாம் நம்புவதில்லை. ஐயப்படுதலும், எது வந்துவிடுமோ நாம் எப்படி ஒன்றைத்துணிவாகச் செய்யலாம் என்று திகைப்பதுமான பயத்தின் குணங்கள் நம்மைச்சூழ்ந்துவிட்டன.

விஷசுரம், கொசுவாயில் சுமந்துவரும் கண்ணுக்குத்தெரியாத பூச்சியால் உண்டாவதைப் பண்டிதர்களும் அறிவார்கள். பண்டைக்கால விஷசுரத்தைத் தீர்க்க வாதிட்டதாகச் சொல்லும் சமணர்களின் மயில்பீலியும் சைவர்களின் திருநீறும் இப்பொழுது தேவையில்லை. கொயினா ரத்தத்தில் சென்றாலே போதுமென்பதைப் பண்டிதர்கள் பார்க்கிறார்கள். இவற்றையெல்லாம் தெய்வங்களின் கூட்டத்தில சேர்த்தால், சொந்தயோசனையையும் செய்கையின் திறமையையும் வீசியெறிந்துவிட்டு, நாம் எண்ணித்தொலையாத தெய்வங்களுக்கு பூசை நைவேத்தியம் பண்ணிக்குருட்டுச்சத்தால் மானுஷீக உரிமைகளைப் புறக்கணிக்க முன்கற்றுக்கொண்டது போலவே இனியுமிருப்போமே யொழிய உலகமுழுதும் ஆளுகிற பொதுவிதி கண்ணுக்குத் தோன்றாது. அந்தப்பொதுவிதியை வசப்படுத்தினால் அதிலிருந்து அதிகாரம், செல்வம், விடுதலை என்ற பரிசுகள் கிடைக்கும். இந்தவிதியை உறுதியான அஸ்திவாரமாகக் கொண்டு எல்லா சமூகங்களும் முற்போக்கடைந்திருக்கிறதென்றே "குடி அரசு" சொல்லுகிறது.

பிராமணன் ஒருவன் கொண்டுவரும் தண்ணீர் அழுக்கு, குடம் கழுவாதது, அவன் உடம்பு மேகம், வியர்வையைத் துடைத்து எல்லாவியாதிகளையும் உண்டுபண்ணும் கிருமிகள் நிறைந்த அழுக்குத்துண்டு, அவன் கைவிரலில் ஜலதோஷக்கிருமிகள் நிறைந்த மூக்குச்சளி, விரலில் நகக்கண்ணில் அரைசொரிந்த படைப்பூச்சிவாசம் இத்தகைய பிராமணன் ஒருவன் கொண்டுவரும் தண்ணீரை குடிக்கத்தகாதென்று சொல்லி, தாழ்ந்த ஜாதியான் ஒருவன் தேக சுத்தமாய், நிறம் கருப்பாயிருந்தாலும், கைகழுவி காய்ச்சி வடிகட்டிக் கொண்டுவந்த நீர் சுத்தமாகவிருக்கிறது குடிக்கத்தகுமென்று சொன்னால், உங்கள் சமயமும், சாஸ்திரமும் அதன் பெரியவர்களும், அதற்குக் கர்த்தாவான கடவுளும் ஒத்துக்கொள்ளாது என்கிறீர்களே! எந்த ஆதாரத்தின்மேல், எந்தச்சமயத்தின் மேல், எந்த கடவுளின்மேல், எந்த நியாயத்தின் மேல், எந்த மனத்திருப்தியின்மேல், எந்த அவசியத்தின்மேல், சோடாக்குடிக்கிறீர்கள் என்றுகேட்டால் வெட்கப்படுவீர்கள். அல்லது "குடிஅரசை" க்கோபிப்பீர்கள். அல்லது தெய்வத்தின்விதியை யாரால் மாற்றமுடியுமென்று அர்த்தப்படாததை உங்கள் காரியத்திற்கு நீங்கள் நம்பாததை சாந்தப்பேச்சால் ஞாயஉணர்ச்சி இல்லாது சொல்லுவீர்கள். தெய்வத்தின் விதியைமாற்றமுடியாது. அதுஎங்கும் வியாபித்திருக்கும், அநாதி நித்தியமானது, இதை நமதுமுன்னோர்களும் கண்டிருந்தார்கள் என்பதைபண்டிதர்கள் தெரிந்த அளவிற்கு "குடி அரசு"ம் தெரிந்திருக்கிறது. அதில் நமக்குத் தர்க்கம்வேண்டாம். நாங்களும் நீங்களும் தெரிந்த அளவு நாடும்தெரிந்திருக்கிறது. பேதித்த சமயங்களோஒன்றுசொன்னபடி மற்றொன்று சொல்லாது. அவைகள்போட்ட சண்டையால், சாஸ்திரங்களின் மண்டை உடைந்துபுண் இன்னும் ஆறவில்லை- அந்தப்புண்ணை ஆற்றாத பண்டிதர்கள் போட்டசண்டையும் இரத்த ஆபாசமாக எழுதின புஸ்தகங்களின் ஆபாசங்களுமே நம்மையெல்லாம் ஆளுக்கோர்மூலை பாக்கிவிட்டன.

சாதி, குலம், பிறப்பு இறப்பு இல்லாமல் பொருளாகக்கண்ட பொருளுக்கு முதற்பொருளாக நிற்கும் அந்த தெய்வவிதியை அறிவால்கண்டு செய்கையில் பயன்படுத்தலாம், எத்தனைக்கெத்தனை அந்தவிதியைஸ்வீகரிக்கிறோமோ அத்தனைக்கத்தனை தடைகள் விலகும் என்பதை பண்டிதர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே "குடி அரசு" சொல்லுகிறது. இந்தவிதியின் ஞானமே இயற்கைநூல் (ஸயன்ஸ்) என்றுசொல்லுவது. இந்த இயற்கைப்புராணத்தைக்கொண்டுதான் ஐரோப்பா இவ்வளவு முன்னுக்குவந்தது. மூன்றுவயதில்கடவுளால் ஞானப்பாலுண்டு விஷசுரம்தீர்க்க அருள்பெற்று, ஒருபாண்டியனுக்கு விஷசுரம்தீர்த்து, அவனைத்தன்சமயத்திலசேர்த்து எண்ணாயிரம்பேரையும் கழுவில்போடவதுவாகவிருந்த நம்பெரியாரும், அவர் பெரியபுராணமும், அதற்குக்கர்த்தாவான சிவனும், அவர் அடியார்கூட்டமும் இப்பொழுது விஷசுரம் தீர்க்கவேண்டுவதில்லை. விஷசுரம் தீர்ந்தவன் தன்சமயத்தைவிட்டு வைத்தியனின் சமயத்தில்சேரவும் வேண்டாம் கழுவிலேறி, விஷசுரம் தீர்த்தவைத்தியனைத்திருப்திபடுத்தவும் வேண்டியதில்லை. பந்தயமும்வேண்டாம் சமயம் ஜாதிகுலம் கோத்திரம்பாராமல் எல்லாதேசத்துஜனங்களுக்கும் விஷசுரமில்லாமல் செய்துவிடுவோம். செய்துவருகிறோம் என்று அந்த இயற்கைபுராணமும் அதைக்கையாளும் வைத்தியர்களும் சொல்லுகிறார்கள்- அதன் பயனைநாமும் அனுபோகத்திலடைந்துவருகிறோம். கடவுள் ஞானப்பாலாலோ அவர்முகத்திலிருந்துவந்த முதன்மையாலோ தங்களுக்குஇயற்கை புராணம் கிடைத்ததென்று அவர்கள்சொல்லுவதில்லை. அதையாருக்கும் கொடுக்காமல் மறைத்துவைக்கவில்லை. கிராமத்துதபால் ஆபீஸ்களிலும் காலணா கொடுத்தால் ஒருபொட்டணம்கிடைக்கும்.

அறுபத்துநான்கு திருவிளையாட்டில் அறுபத்துமூன்றை சிவபெருமானுடன் ஆடிஜெயித்த அம்மன், பார்வதியே பாண்டியனுக்கு மகளாகவந்த அம்மன், அழகர்என்று விஷ்ணுவிற்கு தங்கையாகி இன்னும் சீர்வரிசை சித்திரை மாதம்பெற்றுவரும்அம்மன், எல்லாசக்திகளையும் தோற்றுவித்து அடக்கிக்காட்டி எல்லா ஜீவர்களையும் அன்போடு ஆதரிக்கும்அம்மன், அதனால்குபேரன் மகளெனப்பேர்வாங்கி மதுரையில் மீனாக்ஷியாக அமர்ந்த அம்மன்; இந்த அம்மன் பேரால் நம்தெய்வங்களுக்குப்பெரிய தெய்வமான நடராஜர் வாசம்செய்யும்சிதம்பரத்தில் பிரபு அண்ணாமலைசெட்டியாரால் ஒரு பள்ளி ஏற்பட்டிருக்கிறது. அந்தப்பள்ளிக்கூடத்தில் இலக்கிய இலக்கணப்படிப்பிற்கு மேல் சாஸ்திரப்படிப்பின் வகுப்பில் பார்ப்பான் தவிர மற்றவர்கள் யாராயிருந்தாலும் சேர்த்துக்கொள்ளுவதில்லை. பிரபுவின் கட்டளையா? மீனாக்ஷிக்குச்சம்மதமில்லையா? நடராஜப்பிரபுவின் திருமநுணைத்திறந்துத்தடை வந்துவிடுமா? என்பதைப் பண்டிதர்கள் சொல்லட்டும். சமயத்தின் உண்மை சாஸ்திரத்திலிருக்கிறது. சாஸ்திரமோ வேதத்திலிருக்கிறது-வேதமோ கடவுளிடமிருக்கிறது. கடவுளோ வேதத்தின் முடிவிலிருக்கிறார். முடிவோ மோக்ஷத்திலிருக்கிறது. மோக்ஷமோ மனிதன் அடையவேண்டியவை- மோக்ஷமோ கடவுள் கட்டளையிலுள்ளது, கடவுளைத்தெரிந்தவனுக்குத்தான் மோக்ஷமுண்டு- மோக்ஷமடையவே மனிதன் கடவுளால் உண்டாக்கப்பட்டான்- மனிதன் எல்லாஆசைகளையும் விட்டுக்கடவுள்பேரில் ஆசைவைப்பானாகில் மோக்ஷமடைவான் என்னும் இத்தனையும் பெரியவர்கள் எழுதிவைத்த சாஸ்திரங்களிலிருந்து தெரியவேண்டுமென்கிறார்கள் பண்டிதர்கள். பார்ப்பான்தவிர யாரும் சாஸ்திரம் படிக்கக்கூடாது என்கிற ஏற்பாடு கடவுளால் சொல்லப்பட்டு, பெரியவர்களால் அர்த்தமெழுதப்பட்டு, இப்பொழுதிருக்கும் சாஸ்திரிகளும் ஒத்துக்கொண்டு, தமிழ்பண்டிதர்களும் சம்மதித்து, கோவிலைச்சேர்ந்த பள்ளிக்கூடம் பட்டாவானதுபோக பிரபு அண்ணாமலை செட்டியார் ஏற்படுத்தின பள்ளிக்கூடத்திலுமிருக்கிறதே. மோக்ஷலோகம் பார்ப்பானுக்குமட்டுந்தானோ கடவுள்செய்து வைத்திருக்கிறார்? மோக்ஷலோகம் ஆற்றோரத்திலிருக்கும் ஒரு சிறு ஊரா? அங்குவந்து எல்லாரும் நிறைந்தால் ஊர் நெருக்குண்டு போகுமா? எல்லாரையும் அவர் படைக்கவில்லையா? முகத்திலிருந்து வந்தபிள்ளைகளுக்கும் கைலயங்கிரி உச்சியிலிருந்துவந்த தீக்ஷதப்பிள்ளைக்குந்தானோ சொர்க்கத்திலிடம்? சொர்க்கத்தை யாருக்கும் சொல்லிக்கொடுக்காதீர்கள், சொன்னால் உங்கள்வயிற்றுப்பிழைப்பும் நீங்கள் ஏமாற்றிப் பெருமையடையும் வாழ்வும் போய்விடுமென்று கடவுள் சொன்னாரா? கடவுள் சொன்ன சாஸ்திரம் பாப்பானுக்குத்தான் வருமென்று கடவுள் நினைக்கிறாரா? கைபர்கணவாயினின்று வந்து ஆடுமாடு அடித்துத்தின்னும் ஆரியப்பார்ப்பார்கள் சிதம்பரம்வந்து சிறந்தோர் என்று சொல்லுகையிலும், கழுதைக்கும், குதிரைக்கும், நரிக்கும், காகத்துக்கும், முசலுக்கும், முண்டைச்சிக்கும், பிறந்தவனுக்கெல்லாம் சாஸ்திரம்வந்திருக்கையில் ஆருக்கும்வரும் சாஸ்திரம் என்பது கடவுளுக்குத்தெரியாதா! இப்பேர்பட்ட கடவுள் இருக்கமாட்டார் என்று சொன்னாலும், அந்தக்கடவுள் தானே எதற்கும் முன்வந்து நின்று ஏமாற்றுகிறவனுக்குப்பிரமாணமாக இருக்கிறது. எல்லா உலகத்திலும் சமத்துவமும் பெருந்தன்மையுமுடையகடவுள் இருக்கையில் நம்கடவுளுக்கு சமத்துவப்பார்வையில்லாத கண்ணைகுத்திவிட்டால் நெற்றிக்கண்ணான ஞானக்கண் தானே திறந்துகொள்ளும் என்பதை நினைத்துத்தான் நாங்கள் கடவுள்பக்கம் போகிறோமேயொழிய கடவுளை துன்பப்படுத்திஅவரை ஊரைவிட்டு ஓட்டிவிடுவோம் என்று பண்டிதர்கள் பயப்படவேண்டியதில்லை- வாஸ்தவத்தில் நாங்கள் ஓட்டவேண்டுவதில்லை நமதுகடவுள் அநேகநாளைக்குமுன்னே நாம்செய்யும் கொடுமையைச் சகிக்காமல் மேனாடு ஓடிவிட்டார் என்பதை அநேக காரணங்களோடு முன்னே 'குடி அரசு' சொல்லிற்று ஓடிப்போன கடவுளை மறுபடியும் அழைத்துவரவே 'குடி அரசு' சொல்லுகிறது- அதற்கு நீங்கள் கோபிக்கிறீர்கள்- சாஸ்திரஞன் பண்டிதன் என்று கடவுளுக்கு பெயருண்டு. ஸையின்ஸ் என்னும் இயற்கை சாஸ்திரமானது பிறப்பிடத்தையும் நிறத்தையும் வித்தியாசத்தையும்

(இதன்தொடர்ச்சி 12-ம் பக்கம்பார்க்க)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(6-ம் கட்டுரைத் தொடர்ச்சி)

திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்

இனி தசரதனுடைய வஞ்சகச் சூழ்ச்சிகளுக்கு உடந்தையாயிருந்த சுமந்திரனுடைய செயலைப்பார்ப்போம். அவன் அரசனை நெருங்கி அவனுடைய உண்மை நிலையை ஆராயாமலே பேசுகிறான், இது எவ்வளவு அற்ப புத்தி? பின் தன் பேச்சால் அரசன் வருந்துகிறானென்று தெரிந்தும் அவ்வருத்தத்துக்குக் காரணத்தை அறியமுயலாமல் அவனைவிட்டு போய்விடமுயல்கிறான். இதனாலெல்லாம் இவன் ஏதோ தன் மனத்தில் களங்கத்தோடு நடக்கிறானென்பது ஊகித்தறியவிருக்கிறது, இவனுக்கு, அரசனுடைய சூழ்ச்சி கேட்டை அடையக்கூடுமென அச்சமும் ஐயமும் இருக்கின்றன. அதனாலேயே கைகேசி இராமனை அழைத்துவரச் சொன்னவுடன் போனவன் பின் ஏதோ சந்தேகப்பட்டுக்கொண்டிக் குதிரைக்குச் சுருக்கினது சாக்கெனத் திரும்பவும் வந்து தசரதனை அடைந்து 'முடி சூட்டுக்கு எல்லாம் தயாராயிருக்கிறபடியால் மேல் உத்திரவு என்ன' வென்று கேட்கிறான். இதனாலேயே இவன் தசரதனுடைய சூழ்ச்சியில் ஈடுபட்டு எவ்வாற்றானும் இராமனுக்கு முடி சூட்ட முயல்கிறானென்பதும் கைகேசியினுடைய பேச்சில் ஐயங்கொண்டே திரும்பி வந்தானென்பதும் தெளிவாகும். கைகேசியினுடைய மையலிற் சிக்குண்டு கிடந்த தசரதன் அவள் பேச்சுக்கிசைந்து இராமனை அழைத்து வருமாறு தானே கட்டளையிடுகிறான். அதன் பின்னர் சுமந்திரன் நேராக இராமனை நாடிப்போகிறான், இனி இவ்வாலாற்றைக் கம்பர் எவ்வாறு புரட்டுகிறாரென ஆராய்வோம்,

இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டிலேவேண்டுமென்று வரங்கேட்டதாக வால்மீகிகூற கம்பரோ:—

'ஏய வரங்களிரண்டி னொன்றினாலென்
சேயரசாள்வது சீதை கேள்வனொன்றால்
போய் வனமாள்வதெனப்பு கன்று நின்றாள்'

எனவே கூறுகிறார், கூனி கூற்றாக இராமன் பதினான்காண்டு காட்டிடக வரம் கேளெனவும் பின் கைகேசி கூற்றாக இராமனிடம் பதினான்காண்டு காடேகவா என அரசன் கூறினானெனவும் கம்பர் கூறுகிறாரேயன்றி தசரதனிடம் இவ்விரு வரத்தைக் கைகேசி நேரிற் கேட்டதாகக் கம்பர் கூறவேயில்லை, முக்கியமான இடமாகிய இதில் கம்பர்பிழைப்பட்டார். இராமன் உயிருள்ளளவும் காட்டில் வாழவேண்டுமென்று கேட்டதாக வல்லவா தசரதன் நினைத்துக்கொண்டான்.? இவ்விதமாக மயங்கவைத்தார்கள்-

தசரதனுக்கும் கைகேசிக்கும் நடந்தவாக்குவாதத்தைகூறும்போது வால்மீகி மிகவும் இயற்கையான முறையிற் கூறியிருக்கிறார், கம்பரோ உலக இயற்கைக்கு மாறுபடக்கூறுகிறார். முதன்முதலாக "உனக்குப்புத்தி மயங்கியதா.? அன்றித்தீயோர் செய்த சூழ்ச்சியா? உள்ளதைக்கூறு" என்று தசரதன் கேட்பதாகக் கம்பர் கூறுகிறார். இது தசரதனை சூது வாது அறியாதவனாக உலகுக்குக் காட்ட அவர்செய்யும் முயற்சியே. வால்மீகியோ வஞ்சகத்தசரதன் இச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு பேசுவானோ அவ்வாறே பேசுவதாக எழுதுகிறார். பலமுறை கைகேசியைக் காலைத் தொட்டு வணங்குவதாகத் தசரதன் கூறியதாகவும் ஓர் முறை அவன் காலில் விழுந்ததாகவும் ஆனால் அவன் காலைத் தொட முடியவில்லை யென்றும வால்மீகி எழுதுகிறார். கம்பரோ "தசரதன் அவள் கால் மேல் விழுந்தான்" என்று கூறுகிறார். பெண்களையெல்லாம் சுடவேண்டும் என்று கூறிய தசரதன் "ஒருத்தி கெட்டவளாயிருக்கப் பெண்களையெல்லாம்நிந்திக்கேனே" எனத்தன்னைக் கண்டித்துக்கொள்கிறானென வால்மீகி கூறுகிறார்-கம்பரோ, 'பெண்களேஎ முலகத்திலுமில்லை யென்னும்படி கூரிய வாளால் கொன்று குவிப்பேன்' என்று தசரதன் பொங்கியதாகக் கூறுவதாகப்பாடுவதோடமைகிறார்- இதனால் உண்மையில் மிகவும் கேவலமானவனான தசரதனைத் தம்மையறியாமலே தமது நோக்கத்துக்குமாறாக மேலும் கெட்டவனாக அவர் காட்டுகிறார்-

இராமனுக்கு முடிசூட்டவும் அவனைக்காட்டுக்கனுப்பாமலிருக்கவும் ஆக இவ்விரண்டுக்கும் சேர்த்தே தசரதன் கடைசிவரை மன்றாடுவதாக வால்மீகி கூறுகிறார். கம்பரோ முதலில் அவன் இரண்டுக்கும் சேர்த்துப் போராடியதாகவும் பின் பயனிலையாதென எண்ணி பரதனுக்கு முடிசூட்ட இசைந்து பின் இராமன் காடேகாமைக்குமட்டும் மன்றாடுகிறதாகவும் எழுதுகிறார்- அப்பாட்டு வருமாறு:—

"நின்மகன் ஆள்வான் நீஇனி தான்வாய் நிலமெல்லாம்
உன்வயமாமே ஆளுதிதந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்னுயிர் எல்லாவுயிர்கட்கும்
நன்மகன் இந்நாடிறவாமை நயவென்றான்"

கைகேசியும் "தந்தவரத்தைத் தவிர்கென்றல் நல்லறமாமோ" என்று இராமன் காட்டுகுவதை விட்டுக்கொடேனென்று கூறுவதாகக் கம்பர்கூறுகிறார்- பின்னரும் கம்பர்கூற்றுப்படி தசரதன் இராமனைப் பிரியமுடியாமலே வருந்துகிறான்- கைகேசியும் "இராமனைக்காட்டுக் கனுப்பவில்லையென்றால் இறப்பேன்" என்கிறாள்- உடனே இராமனைக் காட்டுக்கனுப்ப தசரதன் இசைகிறான்- "ஈய்ந்தேனீய்ந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள" என்பது கம்பர்கூற்று- இவ்வாறாக ஒவ்வொருவரத்தையும் தனித்தனியே கொடுத்ததாகக்கம்பர் கூறுகிறார்- இது வால்மீகி கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்டது.

பின் விடியுமட்டும் கைகேசி தூங்கினதாகக்கம்பர்கூறுகிறார். இது இயற்கைக்கு முற்றும்பொருந்தாதது- வால்மீகியோ அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே விடிந்துவிட்டதென்று கூறுகிறார்- கைகேசிதான் மற்றைய பெண்களைவிட தசரதனுக்கு அதிக இன்பந்தந்தாளெனக் கூறுவதையும், தசரதன் கடைசிவரை அவளைப்பலவாறு எமாற்றித்தன் வசப்படுத்த முயன்று கெஞ்சியதையும் கம்பர் கூறவில்லை- விடியும்போது தசரதனை எழுப்பவந்தவர்களைத் தசரதன் தடுத்ததையும் கம்பர்கூறவில்லை.

பின்னர் சுமந்திரன் வந்ததையும் சந்தேகித்துத்திரும்ப வந்ததையும் இன்னும் அவனுடையசெயல்களையும் கூறாது கம்பர் மறைத்தார்- இவருக்கு சுமந்திரன் முதலியோரை மிகவும் நல்லவராகக்காட்டி அவர்களுடைய தீயசெயல்களை மறைக்கவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாக இருந்திருக்கிறது. ஆகவின் சுமந்திரனுடைய கள்ளச்செயல்களை யெல்லாம் மறைத்து பின்வரும் பாடல்களைப்பாடுகிறார்-

"விண்தொட நிவந்தகோவில் வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக்கேட்டான் கைகயன் கோமனணி
தொண்டைவாய் மடந்தைமாரிற் சொல்லமற்றவருஞ்சொல்லப்
பெண்டிரிற் கூற்றமன்னாள்பிள்ளையைக் கொணர்கென்றான்"

இப்பாடலின் கருத்து "சுமந்திரன் தசரதனை அவனுடைய அரண்மனையிலே தேடிக் காணாமல் கைகேசி அந்தப்புரமடைந்து பணிப்பெண்கள் மூலமாகச் சொல்லிவிட, கைகேசி இராமனை அழைத்துவர அவனை ஏவினாள்" என்பது. இதனால் சுமந்திரன் தடையொன்றுமின்றி நேராகக் கைகேசியரண்மனையில் தசரதனை யடைந்து பேசியதையும் தசரதன் கூறியதையும் சுமந்திரன் திரும்பிவந்தபோது தசரதன் அவனைக்கண்டித்து இராமனை அழைத்து வரக்கட்டளையிட்டதுமாகிய வால்மீகி கூறும் உண்மை வரலாறுகளையெல்லாம் கம்பர் மறைத்துவிட்டார். உண்மையை மறைக்கும் கம்பரின் இவ்விழி செயலென்னே? இதனால் கம்பர் தமது காலத்திருந்தவைணவரிடம் புகழ் பெறவே இவ்வாறு பல முக்கியமான உண்மைவரலாறுகளையெல்லாம் மறைத்தாரென நாம் முன்னரே கூறியது மேலும் மேலும் வலி பெறுகின்றது. இவ்வுண்மைகளை யெல்லாம் அறிஞர்கள் உணர்வார்களாக, திருமாலிடத்திலே உண்மையான பக்தியுடையவர்கள் இக்கதையின் உண்மையையறிந்து இத்தகைய இழி குணமுள்ள ஆரியமன்னனாகிய இராமனைத் தங்கள் தெய்வமாகிய திருமாலின் தோற்றமெனக் கூறி உலகை ஏமாற்றிய செயல்களை நன்கு தெரிந்து இனியும் இம்மயக்கத்தழுந்தியிராமல் உண்மையை நாடி உணர்வார்களாக. இனிமேற் சொல்லுதும்.

---

## பார்ப்பனீயத்தை ஒழித்து சுயமரியாதை அடைந்த வீரர்கள்

திருவாளர்கள்:—

1. எஸ். சங்கரலிங்கம், வியாபாரம், கோட்டாறு, தென்திருவிதாங்கூர்.
2. சி. வீரப்பபிள்ளை, கி. வி. ஆறுமுகம் பிள்ளை, உறையூர்.
3. கெ. ரெ. ஜெகநாத ரெட்டியார், முத்துராமலிங்கபுரம், அறுப்புக்கோட்டை.
4. தி. வெ. ரத்தினவேலு பிள்ளை, இளவல். தங்கவேலு பிள்ளை. முசிறி.
5. வீ. சுடலைமுத்து பண்டிதர், வத்த காமம். கண்டி.
6. டி. ஏ. சுவாமியா பிள்ளை. ரிடயர்ட் டாக்டர், திருச்சி.
7. சுப்பையா பிள்ளை, மேலூர், மதுரை ஜில்லா,
8. அருணாசல ரெட்டியார், தோட்டவேலை, கண்டி,
9. கே. என். கஞ்சப்பகவுண்டர், கொங்கர்பாளையம், கோபிமார்க்கம்.
10. வையாபுரி முதலியார் புதல்வன் செங்கமல முதலியார், சென்னிமலை.
11. கே. கோதண்டபாணி படையாச்சி, பாக்கம் கிராமம்,
12. ம. சுப்பா ரெட்டியார், நெய்க்காரபட்டி பழனி தாலுகா,
13. வா. ஜெயராம் நாயுடு செய்யூர் கிராமம், செங்கல்பட்டு ஜில்லா

# வரதராஜுலுவின் சின்னப்புத்தி.

'தமிழ்நாடு' பத்திரிகையில் இவ்வாரம் விருதுநகரில் திரு. சவுந்திரபாண்டிய நாடாருக்கு நடந்த பாராட்டு விழாவின்போது திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் சென்றிருந்ததைப்பற்றியும் அங்கு பேசியதைப்பற்றியும் குறிப்பிட்டு அயோக்கியத்தனமாகவும் அபாண்டமாகவும் சில விஷயங்கள் 'தமிழ்நாடு' பத்திரிகையின் நிருபர் பேரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது 'தமிழ்நாடு' பத்திராதிபரின் அற்பத்தனத்தையும் இழிதன்மையையும் பொறாமையையும் காட்டுகின்றதே தவிர இதனால் யாருக்கும் யாதொன்றும் ஏற்பட்டுவிடவில்லை. முதலாவது திரு வரதராஜுலுக்கு இந்தமாதிரி எழுதித்தீரவேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதை தெரிந்துகொள்ள வாசகர்கள் ஆசைப்படுவார்களானதால் அதை ஒருவாறு சுருக்கமாக தெரிவிக்கின்றேன்.

கொஞ்சகாலைக்குமுன் திரு. வரதராஜுலு விருதுநகரில் ஒரு கூலியைப் பிடித்து தன்னை விருதுநகருக்கு வரவழைக்கும்படி ஏற்பாடு செய்திருந்ததும், விருதுநகர் வாசிகள் அதற்கு இணங்காமல் திரு வரதராஜுலு விருதுநகருக்குள் வந்தால் மரியாதைக்குறைவு நடக்குமென்று அவருக்கு தெரிவித்துவிட்டதுடன் பத்திரிகைகளிலும் அந்தக் கருத்துப்பட எழுதியிருந்ததும், அதையறிந்த திரு வரதராஜுலு தானாகவே விருதுநகருக்குவர சரிப்படவில்லையென்று தனது பத்திரிக்கையிலேயே எழுதிக்கொண்டதும் 'தமிழ்நாடு' வாசகர்கள் அறிந்திருக்கலாம். எனவே இந்தப்பீடி தன்னை அவ்வூருக்குள் வரக்கூடாது என்று சொன்னதற்கு சுயமரியாதை இயக்கத்தின் செல்வாக்குதான் காரணம் என்று நினைத்து வேதனைப்பட்டுக்கொண்டிருந்தது ஒருபுறமிருக்க, திரு. நாயக்கர் விருதுநகருக்கு அழைக்கப்பட்டதும் அங்கு இவ்வியக்கத்தை கொண்டாடினதும் அவருக்கு நடந்த வைபவங்களும், 'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகள் மூலம் பார்த்தவுடன் திரு. வரதராஜுலுவின் துக்கமும் பொறாமையும் அவரது புத்தியை இழிதன்மையில் இறக்கிவிட்டது. அதோடுமாத்திரமல்லாமல் சென்னையில் நடந்த சீர்திருத்த மகாநாடும் அவரது புத்தியைமாத்திரமல்லாமல் மனிதத்தன்மையையும் கெடுத்துவிடும்படி செய்துவிட்டது. அவரது பத்திரிக்கைகளின் நிலைமைகளும் திண்டாட்டத்தில் வந்துவிட்டன. பார்ப்பனர்களினாலும் எதிர்பார்த்தபடி தனக்கு யாதொரு பயனும் கிடைக்க மார்க்கமில்லாமற் போய்விட்டதுடன் அவர்களால் இவர் லக்ஷியம் செய்யப்படவும் இல்லாமல் போய்விட்டார். அதோடு தனக்கு என்று ஒரு கொள்கையும் இல்லாததாலும் எந்தக் கொள்கைக்காரரும் இவரை லக்ஷியம் செய்யாததாலும் எந்தக் காரணத்தைக் கொண்டாவது பொது ஜனங்களின் கவனத்திற்கு வருவதற்கு வேறுவழியில்லாமல் போகவே இந்த முறையிலாவது, அதாவது யாரையாவது வைதால் அவர்கள்நம்மை லட்சியம்செய்து திருப்பி வைவதன் மூலமாவது நமது பெயர் வெளியாகாதாவென்கின்றசின்னப்புத்திகொண்டு, இந்த முறையில் அவர்வெளியாக வேண்டியதாயிற்று. இது சம்மந்தமான மற்ற விஷயங்களை சாவகாசமாய் விவரிக்கக்கருதி அந்த வியாசத்தின் யோக்கியதையை அறிவிக்க இரண்டொரு விஷயத்தை மாத்திரம் இப்போதுகுறிப்பிடுகின்றேன்.

முதலாவது விருதுநகரின் அன்றைய சம்பவத்தைப் பற்றி 'குடி அரசி'லும் 'திராவிடனி'லும் வந்தசேதிகளில் திருநாயக்கரைப் பற்றியதைத் தவிர வேறு ஒன்றும் மறைக்கப்படவில்லை என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மேற்படி 'தமிழ் நாட்டில்' கண்ட விஷயங்களில் முக்கியமானது நான்கு. முதலாவது, திரு நாயக்கர் அன்றைய சம்பவத்திற்கு அழைக்காமல் தானாக வந்து அழையா விருந்தாளியாய் கலந்து கொண்டார் என்பது,

19—11—28ந் தேதி விருதுநகர் திரு செந்தில் குமாரநாடார் அவர்களிடமிருந்து பிரஸ்தகல் எடுத்த தனித்தவேண்டுகோள் கடிதமும் அழைப்புதாளும் திரு நாயக்கருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது, அதற்கு திரு நாயக்கரிடமிருந்து பதில் வாராததால் 20 தேதி மாலை 7—10 க்கு விருதுநகரிலிருந்து Eagerly Expecting your presence here 22nd noon. Please start- Reply என்று செந்தில் குமார நாடார் பெயரால் தந்தியும் அனுப்பப்பட்டது. இதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

இரண்டாவது, கூட்டத்தில் நாடார்களைப் பற்றி நாயக்கர் கூறிய மொழிகள்.

அவைகள் ஒருவாறு உண்மைதான். அதாவது, நாடார்கள் எந்தக்காரணத்தாலோ ஒடுக்கப்பட்ட - கொடுமை செய்யப்பட்ட-வகுப்பில் சேர்க்கப்பட்டவர்கள்என்று கருதி இந்தஜில்லாவிலும் மதுரை. திருநெல்வேலி ஜில்லாக்களிலும் சில பாகங்களில் கோயில் பிரவேசம் மறுக்கப்படுவதுடன் சில இடங்களில் சில ஆணவம் பிடித்த ஜாதியாரால் சில தெருக்களில் நடப்பது கூட மறுக்கப்படுகின்றது" என்று சொன்னார். இது வாஸ்தவமா அல்லவா என்று யோசித்துப்பார்த்தால் அவர் சொன்னது சரியா தப்பா என்பது விளங்கிவிடும். இந்தப்படி திரு சௌந்திரபாண்டிய நாடார் கூட தங்கள் வகுப்பு ஒடுக்கப்பட்டவகையில்சேர்க்கப்பட்டது என்றுசொல்லி இருக்கிறார்.

மூன்றாவது, நாயக்கர் ஒளிந்து கொண்டதுஎன்பதும் ஒருவருக்கு செருப்படி என்பதும்.

கொண்டாட்டம் முடிந்தவுடன் எல்லோரும் மேல் மாடிக்குசாப்பாட்டுக்கு போனதுபோல் திரு நாயக்கரும் சாப்பாட்டுக்குப போனார். சாப்பிட்டு விட்டுஉடனே புறப்படவேண்டியிருந்ததால், அதாவது அடுத்த நாள் காலை 7-30 மணிக்கு மதுரைக்கு அடுத்த-புதிதாய்த் திறந்த ரயில்வே லயினில் 37-வது மயிலில் உள்ள-ஆண்டிபட்டி என்னும் கிராமத்திற்கு போகவேண்டியிருந்ததால் அவர் பயணம் சொல்லிக்கொண்டு வெளியில் வந்து 15 நிமிஷம் காரிலேயே உட்கார்ந்துகொண்டு ஒவ்வொருவரிடமும் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டார். இதில் முக்கியமானவர்கள் திருவாளர்கள் கைலாசம் செட்டியார், செந்தில் குமார நாடார், ராமசாமி நாடார். இதுதவிர்க்க நாடார்குல பத்திராதிபர் திரு. முத்து நாடார் அவர்களிடம் 3, 4 நிமிஷம்வரையில் அருப்புக்கோட்டை விஷயமாகவும், மற்ற விஷயமாகவும் பேசிக்கொண்டிருந்தார். பிறகு பெரிய சப்தத்துடன் அதாவது வைக்கம் வீரருக்கு ஜே, சுயமரியாதை இயக்கத்திற்கு ஜே, முதலிய ஜே சப்தத்துடன் கார் புறப்பட்டது. அதுமாத்திரமுமல்லாமல் நேரே ஆண்டிபட்டிக்கே போகத்தகுந்த அளவு பெட்ரோல் எண்ணெ இருக்கிறதா என்று பார்த்ததில் காரில்எண்ணெ இல்லாததால் அந்த 10 மணி இரவில்கடைத்தெருவில் 20 நிமிஷம் திரு நாயக்கர், திருகூடலிங்கம்பிள்ளை, திரு. எம். டி. எஸ். ஷண்முக வேலாயுதம் ஆகியவர்கள் வண்டியில் உட்கார்ந்துகொண்டேயிருந்து எண்ணெ வந்த பிறகு புறப்பட்டார்கள்.

நான்காவது நாயக்கர், 2, 3 நாள் விருதுநகரிலேயே இருக்கவந்தவர் ஓடிவிட்டார் என்பது.

திரு. நாயக்கர் 23-ந்தேதி ஆண்டிபட்டி கல்யாணத்திற்கு போவாரென்றும் 25, 26, 27 தேதி சென்னைக்கு சீர்திருத்த மகாநாட்டிற்கு தலைமை வகிக்க போவார் என்றும் ஒருமாத காலமாக பத்திரிகைகளில் வெளியாகிவந்ததும், பிரஸ்தாபமாயிருந்ததும் சர்வ முட்டாளுக்குக்கூட தெரிந்திருக்கும். அப்படியிருக்கவிருதுநகரில் திரு. நாயக்கர் 22 ௳ முதல்3, 4 நாள் தங்குவதற்கு சாவகாசமேது என்பதையும், யாரும் அழைக்காமல் கூப்பிடாமல் அவருக்கு அங்கு 3, 4 நாளைக்குவேலைஎன்ன என்பதையும் கடுகளவு மூளை உள்ளவர்களும் கவனித்தால் உண்மைவிளங்காமல் போகாது.

ஐந்தாவது, நாடார் கனவான்களிடத்தில் பணம் பறிப்பதுஎன்பது.

இதற்கு நீண்ட சமாதானம் வேண்டியிருக்கிறபடியால், அதாவது திரு. வரதராஜுலுவின் பொது ஜனங்களின் பணம் பறிக்கும் தன்மையும், இதுவரை பணம் பறித்ததன்மையும், அதன் அவசியமும்,நாயக்கரின் தன்மையும்,அவசியமும்,பறித்ததும்விவரிக்கவேண்டியிருப்பதால் இதற்கு திரு வரதராஜுலு சொல்லும் சமாதானத்தைப்பார்த்து எழுதுகிறேன், ஆனால் 'குடி அரசு' மாத்திரம் தயவு செய்து இடம் கொடுக்க வேண்டுமாய் கோருகிறேன்.

உண்மை அறிய பிரயத்தினப்பட்டு இதன் உண்மை கண்டு பிடித்த,

நாடார்.

---

## குறிப்பு.

மேற்கண்ட நண்பரின்கடிதத்தாலும் திராவிடனில்காணப்பட்ட ஒரு தந்தியாலும் "தமிழ்நாடு" பத்திரிகையின் நிலைமையை ஒருவாறு வாசகர்கள் அறிந்துகொள்ளக்கூடும். இந்தப்புதியதந்திரம் "தமிழ் நாடு" ம் மற்றும்2, 3, பத்திரிகைக்காரர்களும் ஒன்றுகூடி யோசித்துச்செய்த சதியாலோசனை யென்பது சென்னையிலேயே வெளியாயிற்று. அது எப்படியிருந்தாலும் அப்பத்திரிகைகளில் வரும்விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் சமாதானம் எழுதிக்கொண்டிருக்க சௌகர்யமில்லாவிட்டாலும் கூடியவரையில் வந்து கொண்டிருக்கும். மற்றகடிதங்கள் பின்னால் வெளியாகும். ப—ர்


நீங்கள் நெடு நாட்களாக
ஆவலோடு எதிர்பார்த்திருந்த
**பயாஸ்கோப் மிஷின்**




வந்துவிட்டது. தினம் இம்மிஷினைக் கொண்டு ரூ. 4 அல்லது 5 சம்பாதித்துக் கொள்ளலாம்.

நூதனமான அமெரிக்கன் பயாஸ்கோப் மிஷின் (படத்தில் காட்டியது போலவே இருக்கும்) இதற்கு, எண்ணெ விளக்கும் இருக்கிறது. இந்த பயாஸ்கோப் மிஷினில் இதில் வரும் சிலேட் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு வந்தால் அழகிய லேடிகளின் நாட்டியங்கள், சர்க்கசுகள், குதிரைப் பந்தயங்கள், மோட்டார் ஓடுவது, கப்பல்கள் ஆகாய விமானம் முதலியன யாவும் பெரிய பயாஸ்கோப்புகளில் காணுவதுபோல் இம்மிஷினில் சுலபமாகக் காணக்கூடும். விலை ரூ. 2-8-0 மிஷினுடன் இரண்டு சிலேட் இனும். பிரத்தியேகம் சிலேட் டஜன் 1-க்கு ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் 0—8—0

பி. ஆர். ரங்கநாதம் அண்டு கம்பெனி,
9, நாகமணி தோட்டத் தெருவு, மதராஸ்.

## அறிவிப்பு.

இவ்வாரத்திய "குடி அரசு" பத்திரிகையில் 9, 10, 13, 14 ஆகிய பக்கங்களுக்கு பதிலாக "குடி அரசு" அநுபந்தம் வைக்கப்பட்டிருக்கிறது.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஞூ கார்த்திகை-மீ 17-உ

## சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு.

தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு சென்னை விக்டோரியா மண்டபத்தில் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் நடந்தேறிய விபரமும் தலைவர் உபன்யாசமும் மற்றும் பல விபரங்களும நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இத்துடன் வரும் அநுபந்தத்தில் காணலாம்.

அக்கிராசன உபன்யாசத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் சீர்திருத்தக்காரர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்களும், சீர்திருத்தம் செய்யப்பட வேண்டிய விஷயங்களும், செய்ய வேண்டிய முறைகளும், தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, அக்கிராசனர், தாம் சீர்திருத்தத்தில் நம்பிக்கை யுடையவரல்ல வென்றும், அழிவு வேலையிலேயே நம்பிக்கையுடையவரென்றும், அதாவது ஒன்றை மாற்றியோ அல்லது யெடுத்துவிட்டோ அந்த ஸ்தானத்தில் மற்றொன்றை வைக்க வேண்டுமென்கிற விஷயத்தில் கவலையில்லாதவரென்றும், அவசிய மில்லாததும் கொடுமை விளைவிப்பதுமான விஷயங்களை அழித்து விட வேண்டியது என்கின்ற கருத்தின் பேரில் கவலை கொண்டிருக்கும் அழிவுவேலைக்காரரென்றும் சொல்லியிருக்கிறார்.

அதற்கேற்ப இப்போது சமுகிய முற்போக்குக்கும் சமத்துவத்திற்கும் விடுதலைக்கும் புதிதாக நாம எதைக் கொள்ள வேண்டியது என்ன வென்றால், அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் தடையாய் இருப்பவைகளை அழித்துவிட வேண்டு மென்பதே யாகும். இவ்விதம் அழிவு வேலை மூலம் தடைகளை நீக்கிவிட்டால் தானாகவே முற்போகுக்கு சரியான பாதை ஏற்பட்டு விடும் என்பது அதில் நன்றாய் அறியக்கிடக்கிறது. இந்தக் குறிப்பானது, "இருப்பதை எடுத்து விட்டால் வேறொன்று வேண்டாமா?" என்று ஆலோசனை இல்லாமல் பிதற்றிக்கொண்டிருக்கிற விதண்டாவாதிகளுக்கும் பாமர மக்களை ஏய்ப்பதற்குச் சில சுயநலவாதிகள் "நாயக்கர் எல்லாவற்றையும் அடியோடு அழிக்க வேண்டுமென்கிறாரே, அப்படி அழித்து விட்டால் மக்களுக்கு வேறு கதியென்ன?" என்று நீலிககண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் பாஷாண்டிகளுக்கும் தக்க பதிலாகும்.

மற்றும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் நடந்து வந்த சீர்திருத்தங்கள் பலிக்காமல் தடைப்பட்டுப் போனதற்குக் காரணம், மேல் குறிப்பிட்டதான தடைகளாயிருப்பவைகளை சரியானபடி வேருடன் களைந்தெறிவதான அழிவு வேலை செய்யாததுதான் காரணம் என்றும, தற்காலத்தில் செய்யப்படுவதாய்ச் சொல்லப்படுவதெல்லாம் புரட்டும் சுயநலமும் அடிப்படையாய்க்கொண்டதென்றும், சீர்திருத்தத்திற்கு விரோதிகளாய் உள்ள உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களாலும் 'சித்தாந்தக்காரர்'களாலுமே நடைபெற்று வந்ததென்றும் தெளிவாய் எடுத்துக்கூறியிருப்பதிலிருந்து நமது நாடு உண்மையான சீர்திருத்தமடையாமல் போனதற்குக் காரணம் விளங்கும். மற்றும்,

"கபிலரை ஏமாற்றி விட்டோம், புத்தரை ஏமாற்றி விட்டோம், கூன்பாண்டியனை ஏமாற்றி விட்டோம், மூவேந்தர்களை அழித்து விட்டோம், மகம்திய அரசாங்கத்தை ஒழித்து விட்டோம், நாயக்கர் அரசாங்கத்தை பாழ்படுத்திவிட்டோம், கம்பனைக்கொண்டே எங்களைக் கடவுளாகவும் தேவர்களாகவும் செய்துகொண்டோம். இப்படிப்பட்ட எங்களுக்கு சில பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்தே இப்புதிய சீர்திருத்த இயக்கத்தை ஒழித்து எங்கள் ஆதிக்கத்தை பழயபடி நிலைநிறுத்திக்கொள்ளச் செய்வதுதானா ஒரு பிரமாதமான காரியம்" என்று மனப்பால் குடித்துக்கொண்டு இறுமாந்து ஆணவமாய் பிதற்றித் திரிபவர்களுக்கு, அக்கிராசனர் உபந்யாசத்தில் "அந்தக் காலமும் சவுகர்யமும் அப்போதைய அரசாங்கத்தின் போக்கியதையும் வேறு, இந்தக் காலமும் இப்போதைய அரசாங்கமும் சீர்திருத்தம் செய்பவோ அழிவு வேலை செய்யவோ விருப்பம் கொண்டவர்களுடைய சவுகரியமும் வேறு" என்று சொல்லியிருப்பது தக்க பதிலாகும். இப்போதைய இயக்கம, அடிக்க அடிக்க எழும்பும் பந்துபோலவும், வெட்ட வெட்ட தளிரும் கொடிகள் போலவும் பரவிவிட்டது, கொஞ்சகாலத்திற்கு முன் ஒருவர் எழுதியது போல், அதாவது "எங்களுகரு சுயமரியாதை இயக்கம் கண்களை திறந்துவிட்டது, இனி எவர் தடுத்தாலும், இந்த இராமசாமி நாயக்கரே மாறிவிட்டாலும், இந்த உணர்ச்சியைப் அடக்கிவிட முடியாது" என்று எழுதியது போல் இனி என்றைக்கும் இவ்வியக்கமும் இந்த உணர்ச்சியும் மறையாது என்பதையும் யாரும் அழிக்க முடியாது என்பதையும் வெள்ளிடை மலைபோல்விளக்கி விட்டது.

மற்றபடி பெண்கள் விடுதலைக்கு தடையான அர்த்தமற்ற கற்பும், சம்மதமற்ற விதவைத்தன்மையும் அழிக்கப்படவேண்டும் என்றும், அவைகள் அழிக்கப்படத்தக்க முறைகளும், அதாவது புருஷன் என்பவன் "பழையசாதம் சுடுகிறது, விசிறிகொண்டு வீசு" என்றால், உடனே பெண்ஜாதி என்பவள் விசிறிகொண்டு வீசவேண்டியதுதான் கற்பு என்றும், பெண்ஜாதி என்பவள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கும்போது புருஷன் என்பவன் கூப்பிட்டால், திடீரென்று சேந்தும் கயிற்றை விட்டுவிட்டு ஓடிவரவேண்டுமென்றும், ஓடிவந்தால் மாத்திரம் போதாது, கிணற்றில் கயிறும் பாத்திரமும் அந்தரமாய் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும் என்றும், அப்படி தொங்கிக்கொண்டிருந்தால்தான் கற்பு உள்ளவள், பதிவிரதையானவள் என்றும் சொல்வதான கற்பையும் பதிவிரதா தன்மையையும் அடியோடு ஒழித்தாகவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதும், விதவைகளுக்கு அவர்கள் தாய் தகப்பன்மாரோ அல்லது சுற்றத்தார்களோ மறு கல்யாணம் செய்துவைக்காவிட்டால், அவ்விதவைகள் தங்களுக்கு இஷ்டமான கணவரை தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டியது என்றும், புருஷனுடன் வாழும் மற்றபெண்களும் இதற்கு உதவிசெய்து விதவைகளை கணவனுடன் வாழச்செய்ய அநுகூலமாயிருக்கவேண்டும் என்றும்சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது. அதுமாத்திரமன்றி,

குறுகிய நோக்கங்கொண்டோ அல்லது விஷம புத்திகொண்டோ "பெண்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழுக்க ஈனமாய் நடந்து கொள்ளலாமா" என்று கேட்பவர்களுக்கும் சமாதானமாக, அதாவது "கணவன் மனைவி என்பதாக இருவர் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்துவதற்காக செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படிலலுகவோ காதலன் காதலி என்கின்ற முறையில் இருவர்களின் காதல் இன்பத்தின் பயனுகவோ இருவரையும் சமநிலைத் தன்மை கொண்ட கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு இறுக்கப்பட்டிருனாலும் அது எவ்விதத்திலும் பெண்கள் விடுதலைக்கு இடையூறாக இருக்காது" என்று சொல்லியிருப்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

மற்றபடி, விதவைகள் என்னும் கொடுமை படுத்தப்பட்டவர்கள் விஷயத்திலும் "அவர்கள் தங்கள் இஷ்டம் நிவர்த்திக்கு இனி பெற்றோர்களையோ மற்றவர்களையோ எதிர்பாராமல் தாங்களாகவே தக்க கணவனை தெரிந்தெடுத்து வெளிப்படுத்திவிட வேண்டியதுதான்" என்று குறிப்பிட்டதும், மற்றப்படி "புருஷனுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்களும் விதவைகளின் மேற்கண்ட முயற்சிக்கு உதவிசெய்யவேண்டியது" என்றும் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதே யாகும்.

மற்றபடி ஜாதி வித்தியாசம், தீண்டாமை, முதலியவைகளை அழிக்கப்படுவதை ... களை அழிக்கப்படுவதும் கவனிக்கப்பட்டுள்ளது

யும் குறிப்பிடப்பட்டிருப்பவைகளும் ஊன்றி கவனிக்கத்தக்கவைகளாகும்.

மகாநாட்டிலும் அக்கிராசனரின் உபந்நியாசத்திற் கண்டபடியே சில தீர்மானங்களே யானாலும் மிக முக்கியமான தீர்மானங்களாகவே தீர்மானிக்கப்பட்டிருப்பதானது குறிப்பிடத்தக்கது.

அதாவது, பெண்கள் சுதந்திரத்திற்குப் பெரிதும் இப்போது இடையூறாயிருப்பது அவர்களுக்கு சொத்துரிமை இல்லாமையால்தான் என்பதை உணர்ந்து இனிமேல் குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சம உரிமையும், விதவைகள் விதவைத் தன்மையுடன் இருந்து கொண்டு கஷ்டப்பட வேண்டியதற்கு காரணமாயிருப்பது அவர்களுக்கு புருஷன் இறந்தவுடன் மற்றவர்களிடம் ஜீவனாம்சத்திற்கு தொங்கிக்கொண்டிருக்க வேண்டியிருப்பதால்தான் என்பதை உணர்ந்து அது மாறும்படி புருஷன் சொத்து பாத்தியம் முழுவதும் சர்வ சுதந்திரத்துடன் விதவைகளுக்கு அளிக்கப்பட்டு விடவேண்டும் என்றும் தீர்மானித்திருப்பதானது சரியான பரிகாரமாகும்.

மற்றும் தீண்டாதார்கள் என்பவர்கள் கல்வி இல்லாத காரணத்தால் முன்னேற முடியாமல் இருப்பதால், அவர்களுக்கு சாப்பாடு போட்டு கட்டாயக்கல்வி கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதும், மூடபழக்க வழக்கங்களை ஒழிப்பதற்காக பள்ளிக்கூடங்களில் குருட்டு பக்தி மூடநம்பிக்கைகளுக்கு இடந்தரும்படியான கல்வி கற்பிக்கக்கூடாது என்றும், மூடநம்பிக்கையும் குருட்டு பக்தியும் உள்ள உபாத்தியாயர்களை பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளை படிப்பிக்க சேர்க்கக்கூடாது என்றும், உபாத்தியாயர்களைத் தயார் செய்யும் பள்ளிக்கூடங்களிலும் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களிலும் மூட நம்பிக்கையும் குருட்டு பக்தியும் உண்டாகத்தக்க எந்தபுஸ்தகங்களையும் பாடபுஸ்தகமாக வைக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதும், மற்றும் சில தீர்மானங்களும், முக்கியமாக மதத்தின்பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழக்கத்தை ஒழிக்கச் சட்டம் செய்யவேண்டும் என்று ஸ்ரீமதி டாக்டர் லோகனி ஆர்யா அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமதி அலமேலு மங்கைத்தாயாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் குறிப்பிடத்தக்கவை.

எனவே இவ்வளவு முக்கிய தீர்மானங்கள் செய்ததில மகாநாட்டு பிரதிநிதிகள் காட்டிய ஆரவாரத்திற்கும் ஊக்கத்திற்கும் அளவே இல்லை. மகாநாட்டுக்கு விஜயம் செய்து தீர்மானங்களில் கலந்து கொண்ட பெரியோர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் அரசாங்க இலாகா இப்போதய மந்திரிகளும், மாஜி மந்திரிகளும் இனி வரப்போகும் மந்திரிகளும் சட்ட சபை பிரதிநிதிகளும், பல ஸ்தலஸ்தாபனத் தலைவர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், மத சம்மந்தமான ஆராய்ச்சியுள்ளவர்களும், சீர்திருத்தத்தில் பெரிதும் கவலை கொண்டவர்களும், [illegible] கல்வியும் அறிவும் உள்ள பெண்மணிகளும், பண்டிதர்களும், வாலிபர்களும், முதியோர்களும் ஆகிய பல திறப்பட்ட தக்க பிரதிநிதிகளே யாவார்கள். அவர்களில் வெளியூர்களிலிருந்தும் அனேகர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் மேல்கண்ட மகாநாட்டை திறம்படவும் சிறப்புடனும் நடத்திய பெருமை மிகுதியும் திரு சுரேந்திரநாத் ஆரியா அவர்களையும் ராவ்பகதூர் யம். கே. ரெட்டி அவர்களையும் சேர்ந்தது என்றே சொல்லுவோம். இது வரை சீர்திருத்த சம்மந்தமாக எத்தனையோ மகாநாடுகள் நடந்திருந்தாலும் இதுபோன்ற பிரதிநிதித்துவமும் பலன் தரத்தக்க தீர்மானங்களும் கொண்ட மகாநாடு மிகச்சுருக்கமாகத்தானிருக்கும்.

இந்த தீர்மானங்கள் எவ்வளவோ முன்னேற்றமுடையதானாலும் அவைகளை நிறைவேற்றி வைப்பதில் அரசாங்க சம்மந்தமான சட்ட உதவிகளும் தேவையாயிருப்பதால், பொது ஜனப்பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதில் பொது ஜனங்கள் மேல் கண்ட அபிப்பிராயமுடையவர்களையே சட்டசபை லோகல் போர்டு முதலிய ஸ்தாபனங்களில் போய் சேரும்படி பார்க்கவேண்டியதே முக்கிய கடமையாகும் என்பதைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

## சென்னை சட்ட சபை.

இந்த வாரம் சென்னையில் நடந்த சட்டசபைக் கூட்டத்தில் மந்திரிகனம் முத்தய்யா முதலியார் அவர்கள் தமது இலாக்காவில் உள்ள உத்தியோகங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்படுத்தியதுபற்றி அவரைக் கண்டிப்பதற்காக சட்டசபையை ஒத்திவைக்கவேண்டும் என்று ஒரு அவசரப் பிரேரேபனை பார்ப்பனர்களால் திரு. சாமி வெங்கிடாசலத்தைப் பிடித்து சுயராஜ்யக் கட்சி தலைவர் என்கிற முறையில் கொண்டுவரப்பட்டது.

காங்கிரஸ் கக்ஷி என்றும், சுயராஜ்யக் கக்ஷி என்றும், தேசியக் கக்ஷி என்றும், அவைகளுக்கு சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதும் முட்டுக்கட்டை போடுவதுதான் கொள்கைகள் என்றும் சொல்லி பார்ப்பனரல்லாதாரிலேயே சில கூலிகளைவிட்டு பிரசாரம் செய்யச்செய்து பாமர மக்களை ஏமாற்றி சட்டசபைக்குப்போய் உட்கார்ந்துகொண்டு, பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே விரோதமாய் பல கெடுதிகள் செய்துவந்திருப்பதுடன் இப்போது தைரியமாய் வெளியில் வந்து உத்தியோகப் பிச்சை கேட்கவும், பார்ப்பனல்லாத சமூகத்தாருக்கு அளிக்கப்படும் சமசந்தர்ப்பத்தை ஒழித்து தங்கள் ஆதிக்கத்தையே எப்போதும் நிலைநிறுத்திக்கொள்வதற்குமே இது உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த பார்ப்பனர்கள் காங்கிரசிற்குள் சுயராஜ்யக் கக்ஷி என்பதாக ஒரு சூழ்ச்சிக் கக்ஷியை எப்போது ஆரம்பித்தார்களோ அன்றுமுதலே சுயராஜ்யக்கக்ஷி பார்ப்பனக் கக்ஷி என்றும், அந்தசமயம் அதை ஆதரித்து பார்ப்பனர்களின் காலை நக்கிக் கொண்டு அவர்கள் பின் திரிந்துகொண்டிருந்த பார்ப்பனரல்லாதார்கள் எல்லாம் வயிற்றுச்சோற்று பிரசாரகர்களும் பார்ப்பனக் கூலிகளும் பார்ப்பனரல்லாத சமூகத்தைக் காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கவேண்டிய நிலையில் இருக்கும் இழிமக்கள் என்றும் ஒவ்வொரு நாளும் ஓயாமல் சொல்லிவந்தோம். அந்த சமயம் அநேக பார்ப்பனக் கூலிகள் நம்மை சர்க்கார் தாசரென்றும் தேசிய விரோதிகள் என்றுங் கூட தூற்றி வந்ததுடன் நில்லாமல் சுயராஜ்யக்கக்ஷி ஒன்றுதான் சர்க்காரோடு யுத்தம் செய்யும் கக்ஷி என்றும், சுயராஜ்யக் கட்சிக்காரர் சொந்தத்தில் எவ்வளவு அயோக்கியர்களாக இருந்தாலும் அவர்களுக்குத்தான் ஓட்டுக்கொடுக்க வேண்டும் என்றும் பார்ப்பனர்களிடம் கூலி வாங்கிக்கொண்டு எழுதியும் பேசியும் பிரசாரம் செய்தார்கள்.

ஆனால் நாம் சொல்லிவந்தது அப்பொழுதே அநேகருக்கு சரியென்றுபட்டிருந்தாலும் இப்போது ஷை கூலிகளும் ஒப்புக்கொள்ளத்தக்கமாதிரியில் அது வெளியாகிக் கொண்டு வருவதும், அக்கூலிகள் அது விஷயத்தைப் பொருத்தமட்டிலும் திருடனைத் தேள்கொட்டியதுபோல் வாய்மூடிக்கொண்டிருப்பதும் வெட்டவெளிச்சமாய்விட்டது. மந்திரி கனம் முத்தய்யா முதலியார் அவர்கள், தமது ஆதிக்கத்தில் உள்ள பத்திரப்பதிவு இலாக்காவில் உள்ள உத்தியோகங்களில் ஒவ்வொரு பன்னிரண்டு உத்தியோகத்திற்கும் பார்ப்பனரல்லாதார்களுக்கு பத்தும், பார்ப்பனர்களுக்கு இரண்டும் என்பதாக பிரித்து பார்ப்பனரல்லாதாரிலும் உள்ள முக்கிய பிரிவுகளான மகம்மதியர்களுக்கு 2ம், கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் ஆகியவர்களுக்கு 2ம், ஆதித்திராவிடர்களுக்கு 1ம், இவர்கள் நீங்கிய பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களுக்கு 5ம் என்பதாகவும் பிரித்து அந்தப்படி உத்திரவும் போட்டுவிட்டார். எனவே இந்தக் கொள்கையையும் அவருடைய தைரியத்தையும் நாம் பாராட்டியதுடன் பிரிவினை செய்த விகிதாச்சாரத்தைப் பற்றி நமக்குள்ள அதிருப்தியையும் முன்னமே குறிப்பிட்டிருக்கின்றோம். ஏனெனில் மகமதியர்களுடைய எண்ணிக்கைக்காவது கிருஸ்தவர்களுடைய எண்ணிக்கைக்காவது பார்ப்பனர்களுடைய எண்ணிக்கைக்காவது ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை குறைந்த எண்ணிக்கையுடையதல்ல.

பார்ப்பனர்களையும் கிறிஸ்தவர்களையும் பார்க்கிலும் சற்றேறக்குறைய ஆதிதிராவிடர்கள் [illegible] மடங்கு அதிகமானவர்கள் என்று சொல்லலாம். எனவே இந்த திட்டம் ஆதிதிராவிடர்கள் விஷயத்தில் அநியாயம் செய்யப்பட்டதாகத்தானாலும் திட்டம் ஏற்படுத்த முனைந்ததைப்பற்றியும் இதை ஒருவழிகாட்டிக்கொண்டாவது உபயோகித்துக் கொள்ளவாவது சந்தர்ப்பம் கிடைத்ததென்பதைப் பொருத்தவரையிலும் நாம் வரவேற்றதுடன் கனம் முதலியார் அவர்களையும் நெஞ்சாரப் பாராட்டி வாழ்த்தினோம்.

காங்கிரசுக்கட்சியாரும் சுயராஜியகட்சியாருமாகிய யோக்கியவர்கள் இப்போது இதை

எதிர்க்க வேண்டிய அவசியமென்ன என்பதே நமது கேள்வி.

"உத்தியோகத்தை இந்தியமயமாக்கவேண்டுமென்பதுதான் காங்கிரசின் முக்கிய கொள்கையாயும் லக்ஷியமாயும் இருந்து வந்திருக்கின்றது. அந்தப்படி பல உத்தியோகங்கள் இந்தியமயமாக்கப் பட்டதுடன் பல சிறு உத்தியோகங்கள் அளிக்கும் அதிகாரமும் இந்திய மயமாக்கப்பட்டிருக்கின்றது.

இதன் பயனாய் ஏற்படும் உத்தியோகங்களை இந்தியர்கள் என்பவர்கள் எல்லோரும் அடையும்படி செய்யத்தக்க ஒரு திட்டம் போட்டால் இதில் ஏன் ஒரு கூட்டத்தாருக்கு, அதிலும் காங்கிரஸ்காரர்கள் என்பவர்களுக்கு, அதிலும் சுயராஜியக் கட்சிக்காரர்கள் என்னும் சட்டசபையில் முட்டுக்கட்டை போடப் போனவர்களுக்கு இத்தனை ஆத்திரம் உண்டாக வேண்டும்? தேசிய பத்திரிக்கைகள் என்று சொல்லும் 'இந்து' 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளும் அவைகளின் வாலைப்பிடித்துக் கொண்டு வயிறு வளர்க்கும் குட்டிப்பத்திரிகைகளும் ஏன் இந்தப்படி ஊளையிட வேண்டும்? என்பதை வாசகர்களையே யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம். இந்தப் பார்ப்பனர்களும் அவர்கள் கூலிகளும் இத்தயாதிரியான காரியங்களுக்கு முக்கியமாய்ச் சொல்லும் ஆக்ஷேபங்கள் என்னவென்று பார்ப்போமானால் "எல்லா வகுப்பாருக்கும் உத்தியோகங்களில் பங்கு இருக்கும்படி செய்துவிட்டால் நிர்வாகத்தில் ஊழல்கள் ஏற்பட்டுவிடும்" என்கின்ற ஒரே பல்லவிதான் பாடப்பட்டு வருகிறது. இதையே தான் கோவை திரு. சி. வி. வெங்கிட்டரமணையங்கார் சட்டசபை வாதத்தில் சொல்லி இருக்கின்றார். இதை பொது ஜனங்கள் சற்று கவனிக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

ஒவ்வொரு வகுப்பாருக்கும் உத்தியோகத்தில் பங்கு இருக்க வேண்டும் என்று சொல்லுவதற்கும் நிர்வாக ஊழலுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?

இப்பொழுது கனம் முத்தையா முதலியார் அவர்களால் பிரித்துக் காட்டப்பட்ட எந்த ஒரு வகுப்பாராவது சுட்டிக்காட்டி பெரிதும நிர்வாகத்திறமை அற்றவர்கள் என்று யாராவது மெய்ப்பிக்க முடியுமா? என்று கேட்கின்றோம். மந்திரி கனம் முதலியாரவர்கள் பிரித்திருப்பதும் இதுவரை அரசியலில் பிரிக்கப்பட்டு வந்திருப்பதுமான வகுப்புகள் அதாவது,

பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், பார்ப்பனரல்லாதார்களில் மகமதியர், கிறிஸ்தவர், இந்துக்கள், கிறிஸ்தவர்களில் ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், தீண்டிக்கொள்ளக் கூடியவர்கள் என்று கருதும்படியானவர்கள், தீண்டாதவர்கள் என்று சொல்லப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் என இந்தப்படி வெகு காலமாக வேபிரிவினையாக்கப்பட்டு இருக்கும் வகுப்புகளில் எந்த வகுப்பாரை இந்த சுயராஜ்யக் கட்சிக்காரர்களான திரு. சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார் போன்ற பார்ப்பனர்கள் குறிப்பிடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

திரு அய்யங்கார் குறிப்பிடும் நிர்வாகத்திறமை என்ன என்பதும் இங்கு நமக்கு விளங்கவில்லை. அதை சிறிதாவது குறிப்பிட்டிருப்பார்களானால் நிர்வாகத்திறமையைப்பற்றிப் பேசியதானது யோசிப்பதற்கு பொறுப்பானதாயிருந்திருக்கும். அல்லது இதுவரை உத்தியோகம் பார்க்க நேரிட்ட வகுப்புகளில் எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிலாவது திறமைக்குறைவை கண்டு பிடித்து சுட்டிக் காட்டி இருந்தாலாவது அது யோக்கியப் பொறுப்புள்ளதாயிருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் வெறும் கூப்பாடு போடுவதானது வெறும் அயோக்கியத்தனமா அல்லவா என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒரு உத்தியோகத்திற்கு வேண்டிய திறமை என்னவென்பதை அந்தந்த உத்தியோகத்தின் விளம்பரத்தின் கீழேயே குறிப்பிட்டிருக்குமே ஒழிய வேறில்லை. அதில் யாருக்காவது ஆக்ஷேபனை இருந்தால் திறமை இன்னதென்று குறிப்பிடும் போதுமாத்திரம் அதைப்பற்றி பேசி திறமையை தீர்மானித்துக் கொள்ளலாமே யல்லாமல் அத்திறமையை வகுப்பில் கொண்டுவந்து புகுத்துவதில் எவ்வளவு அயோக்கியத்தனமும் கெட்ட எண்ணமும் இந்தக் கூட்டத்தாருக்கு இருக்கின்றது என்பதை வாசகர்களாகவே தெரிந்து கொள்ள விட்டுவிடுகின்றோம்.

தவிரவும், முதலாவதாக ஒரு உத்தியோகத்திற்கு அவசியமாக வேண்டியிருக்கும் கல்வியின் யோக்கியதாபக்ஷமோ அல்லது நிர்வாகத் திறமையோ இன்னது என்று தீர்மானித்து விட்டால் உத்தியோகத்திற்கு தெரிந்தெடுக்கும் போது அந்த இரண்டும் இருக்கின்றதா இல்லையா என்று பார்த்துக்கொள்ளுவதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனை இல்லை, ஆனால் அந்த உத்தியோகத்திற்கு வேண்டிய யோக்கியதையைவிட மற்றொருவன் அதிக யோக்கியதாபக்ஷம் பெற்றிருப்பதாய் சொல்லவந்தால் அதை உத்தியோகம் கொடுப்பவர்கள் கவனிக்கவேண்டிய அவசியமில்லை என்றுகூட நாம் சொல்லுவோம். ஏனெனில் கலாசாலைக் கல்வியே யோக்கியதாபக்ஷத்திற்கு போதுமானது என்பதானால் அது திறமையை கவனிப்பதாகாததாய்ப் போய்விடும். ஏனெனில் இப்போது கருதப்படும் கலாசாலை யோக்கியதாம்சம் என்பது சில கிராமபோன் பிளேட்டுகளுக்கு கூட கிடைத்துவிடும். அதாவது, ஏதாவது ஒன்றை நெட்டுருப்போட்டு பாடம் பண்ணி ஒப்புவித்துவிட்டவரே யோக்கியதாம்சம் பெற்றவர் என்றால், யோக்கியதாம்சத்தின் கேவலத்திற்கு இதைவிட வேறு உதாரணம் தேவை இல்லை. சர்வ கலாசாலை பரீக்ஷைகளால் 'இவன் பரீக்ஷையில் தேறிவிட்டான்' என்று கால் செஜ சடீகத்துண்டு வாங்கிவிட்டால் அது நிர்வாகத்திறமைக்குக்கூட போதுமானதென்று சொல்ல வருவார்களானால் உடனே அந்த கலாசாலைகளை ஒழித்துவிடவேண்டும். அல்லது அக்கலாசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்போதே நிர்வாகத்திறமையை சோதித்து விடவேண்டும். அல்லது சேர்க்கும்போதே வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி சேர்த்து யோக்கியதை உண்டாக்கி வைக்க வேண்டும்.

நாம் ஏன் இப்படிச் சொல்லுகின்றோம் என்றால் கலாசாலைகள் உத்தியோக யோக்கியதைக்காக படிப்பிக்கின்ற ஸ்தாபனம் என்று இதனால் தெரிகின்றபடியால்தானே ஒழிய வேறில்லை. அன்றியும் நிர்வாகத்திறமைக்கு வகுப்புகளை கவனிக்கக்கூடாது என்று யாராவது சொல்ல வருவார்களானால் நிர்வாகத்திறமைக்கு நெட்டுருவை கண்டிப்பாக கவனிக்கக்கூடாது என்று சொல்லுவோம்.

கனம் முத்தையா முதலியாரை மற்ற மந்திரிகளும் நிர்வாகசபை மெம்பர்களும் இன்னும் பின்பற்றாமல் இருப்பதைப்போன்ற பொறுப்பற்ற தன்மை அவர்களுக்கு வேறு இல்லை என்றே சொல்லுவோம். அதுமாத்திரமல்லாமல், சட்டசபையில் மேற்கண்ட ஒத்திப்போடும் தீர்மானம் வந்த காலத்தில் சட்டசபை மெம்பர்கள் அதைசீக்கிரம் முடித்து ஓட்டுக்குவிட்டு தோற்கடிக்காமல் சட்டசபையில் வெறும் பேச்சிலேயே இருந்துவிட்டதானது மெம்பர்களுடைய பொறுப்பற்றதன்மையையும் காட்டுகின்றது. என்றாலும் இனி அடுத்துக்கூடும் சட்டசபைக் கூட்டத்திலாவது சட்டசபை மெம்பர்கள் இம்மாதிரி பொறுப்பற்ற தன்மையாய் இராமல் உத்தியோகத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஏற்பாடு செய்ததற்காக கனம் முத்தையா முதலியார் அவர்களை பாராட்டும் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுவதுடன் அந்தப்படி செய்யாத மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் நிர்வாக சபை மெம்பர்கள்மீது கண்டனத் தீர்மானமும் கொண்டுவந்து நிறைவேற்றி வைக்க வேண்டுமாய் விரும்புகின்றோம்.

---

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1928 ௵. S. C, No. 1818.

பெரியாக்கவுண்டன்—வாதி.

கருப்பப்பறையன்—பிரதிவாதி.

ஷை நெம்பர் பிரதிவாதியாகிய கருப்பப்பறையனுக்கு, ஷை நெம்பர் வாதி வக்கீல் ஈ. வி. கஞ்சப்பசெட்டியார் தெரிவிப்பதென்னவெனில்,

ஷை வாதி உம்முடையபேரில் பிராமிசரி நோட்டுப்படி ரூ. 129—15—3. கிடைக்க வேணுமாய் தாவா செய்து 3—12—28 தேதி வாய்தாப் போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் ஷை கோர்ட்டில் வந்து ஆஜராகாவிடில் ஒரு கக்ஷியாக தீர்மானிக்கப்படுமென்பதை அறியவும்.

ஈரோடு. 30—11—28 } E. V. கஞ்சப்பசெட்டியார் வாதி வக்கீல்

---

## நோட்டீஸ்.

ஈரோடு டி. மு கோர்ட்டில்

O. S. No. 843 of 1928

வாதி—ஈரோடு தாலூக்கா முகாசி அனுமப்பள்ளி கிராமம் ராயபாளையத்திலிருக்கும் குருநாத கவுண்டன் மகன் பெரியண கவுண்டன்.

2-ம் பிரதிவாதி—ஈரோடு தாலூக்கா அட்டவணை அனுமப்பள்ளி கிராமம் அஞ்சாம்பாளையத்திலிருக்கும் சின்னக்கவுண்டன் மகன் காசிக்கவுண்டன்.

ஷை நம்பரில் வாதி பெரியணகவுண்டனுக்கு ஷை 2-ம் பிரதிவாதி காசிக்கவுண்டனும் அவருடைய சகோதரர்களான இறந்துபோன முத்துகவுண்டனும் சென்னிமலைக்கவுண்டனும் 1920௵ ஜூலைமீ 9உ யில் அசல் ரூ 500க்கு எழுதிக் கொடுத்திருக்கும் அடமானப்பத்திரப்படி அசல் வட்டிசகிதம் ரூ 928ம் பின் வட்டியும் கோர்ட்டு செலவும் கிடைக்க வேணுமாய் தாவா செய்து மேற்படி தாவா 11-12-1928 தேதி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருப்பதால் ஷை தேதியில் ஷை 2 ம் பிரதிவாதி கோர்ட்டில் ஆஜராய் தனக்குள்ள ஆக்ஷேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளா விட்டால் ஷை யான் பேரில் ஒரு கக்ஷியாக கோர்ட்டாரால் தீர்ப்பு செய்யப்படும் என்ற விவரம் இதனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

I—12—28 ஈரோடு } சே. சுந்தரமய்யர், வாதி வக்கீல்.

### கோடுமுடி ஹைஸ்கூல் மாணவர் சங்கத்தில் தீண்டாமை-
### பார்ப்பனச் சிறுவர்களின் அழுகை

மேற்படி சங்கத்தின் கூட்டமொன்று சென்ற 14-11-28 தேதி மாலை திரு. கே. சி. சொகலிங்கக் கவுண்டர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது சமயம் கே. பி. கருப்பணன் என்பவரால் தீண்டாமையை ஒழித்தல் என்பதைப்பற்றி ஓர் அரிய வியாசம் படிக்கப்பட்டது. (மெஜாரிட்டியாக) இதை மற்ற மாணவர்களெல்லோரும் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்றும் தீண்டாத ஜாதியாகிய ஆதி திராவிடர்கள் படும் பல கஷ்டங்களையும் தீண்டக்கூடாதென்று சொல்லுகிற உயர்ந்த ஜாதியார்களினால் அவர்களை நடத்தும் கொடுமைகளையும் விரிவாகப் பேசினார்கள். இதைக்கேட்டுக் கொண்டிருந்த ஓர் பார்ப்பனச் சிறுவன் எழுந்து "நாம் கட்டாயம் தீண்டாமையைக் கடைப்பிடிக்க வேண்டும். நாங்கள் இதை விலக்கமாட்டோம். இது வர்ணாசிரம தருமத்துக்கு விரோதமாகும். இது ஆதிகாலம் தொட்டு இருந்துவருகிறது. ஆதலால் தற்காலம் இதை கைவிடமுடியாது" என்று அழுதான். மற்றொரு பார்ப்பனச் சிறுவன் சமத்துவம் கொடுக்கக் கூடாதென்றும், தாழ்த்தப்பட்ட ஜாதியாருக்கு ஆறு, குளம், கோவில் முதலியவைகளில் சமத்துவம் இல்லையென்றும் பல உதாரணங்களைக்கொண்டு புன்சொற்பொழிவுநிகழ்த்தினார். பின்னொரு பார்ப்பனச்சிறுவன் அக்கூட்டத்தினிடையே எழுந்து" நாம் ஏன் அவர்களுக்குச் "சம உரிமைகொடுக்கவேண்டும்? அவர்கள் வேண்டுமானால் தனியே படித்துறை, குளம், கோவில்ஏற்படுத்திக்கொள்ளட்டும்" என்று சொன்னான். என்னே! தற்காலம் (VI Form) டத்தாவது படிக்கும்மாணவர்களே இவ்வாறு கூக்குரலிட்டால் வைதீகர்களுக்கு நாம் என்னென்றுரைப்பது? கிடக்க.

பிறகு திரு. வி. சீனிவாச அய்யர் பி. ஏ, எல். டி. அவர்கள் வருணாசிரம தர்மத்தில் தீண்டாமையைப்பற்றி ஒரு வரியும் காணப்படவில்லையென்றும் அது பின்னால் பிராமணர்களால் எக்காரணம்பற்றியோ ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதென்றும் சொன்னார். பிறகு சரித்திர ஆசிரியர் திரு. வி. என். வெங்கடேச அய்யர் அவர்கள் முன் காலத்தில் சரித்திர ஆராய்ச்சியில் ஒன்றும் தீண்டாமையைப்பற்றி கூறப்படவில்லையென்றும் வருணாசிரம தர்மம் ஏற்படுத்தியோரால் இத்தீண்டாமை என்னும் கொடிய பழக்கம் தீற்பட்டதென்றும்சொன்னார். பின்னர் திரு. வ கே. ஆர். வெங்கடேஷ அய்யர் அவர்கள் தீண்டாமையென்னும் கொடிய பழக்கத்திற்குக் காரணம் உயர்ந்த ஜாதியென்று சொல்லப்படுவோரின் படிப்பின்மையே என்னும் இத்தீண்டாமையை ஒழித்தாலன்றி நம் நாடு வறுமைப்பிணியினின்றும் நீங்காதென்றும், தீண்டாமையை ஒழிக்க நாம் எல்லாவழிகளிலும் முயற்சிசெய்யவேண்டுமென்றும் விரிவாகப் பேசினார். பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ஓர் மாணவன்.


அநேக தங்க மேடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

## [ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஒளஷதம்.

இந்த ரசம் வினைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தாசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தாசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

## அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதிகளையும் போக்கி அன்றுடன் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஒளஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும். 24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

## தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0 வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், ஸ்ஞானபான அநுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்.

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல பிள்ளை, காந்தி கதர் நிலயம், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர் & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

தண்டபாணி வைத்தியசாலை,
292, சைனாபஜார், மதராஸ்

வாஸன் புஸ்தகசாலை,



## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி. சென்னை.

244, தங்கசாலை வீதி, சென்னை.


அறிவு என்று அடிமைப்பட்டதோ அன்றே உடலும் அடிமைப்பட்டு விட்டது.

3 ம் பக்கத் தொடர்ச்சி.

பொருட்டாக்காமல் எல்லாரும்வந்து தன்னைப்படித்து பயன்பெறும்படி கூவியழைத்து, ஒன்று இரண்டு ஆங்கிலேயர் விரோதப்படினும் அவர்களையும் அவமானப்படுத்துகிறது. அந்த நாட்டில் பண்டிதக்கடவுள் குடிபோவதில் ஆச்சிரியமென்ன?

நம்முடைய ஒரு சாஸ்திரமாவது தள்ளப்படவில்லை. ஒன்றாவது கண்டிக்கப்படாமலிருக்கவில்லை. உருத்திரனே பிர்மா, விஷ்ணு, சிவன், இவர்களை உண்டுபண்ணினதென்றும், சிவனிடமிருந்தே பிர்மா, விஷ்ணு உண்டானார்களென்றும், விஷ்ணுவே சிவனையும், பிர்மாவையும், ஆக்கினார் என்றும், பிர்மாவே சிவனையும், விஷ்ணுவையும், படைத்தாரென்றும் எழுதியிருக்கும் சாஸ்திரங்கள் அநேகம். இதை நிச்சயப்படுத்த படிப்பும் காலமும் செலவு செய்தது கணக்கில்லை. இத்தனைக்கும் காரணம் சாஸ்திரம்தான். 'மூன்றுமொன்றாய் மூளைத்தெழுந்த சோதே' என்பதும் சாஸ்திரம் தான். ஒருபதம் சிவனுமாரும், விஷ்ணுமாகும், நானுமாகும், நாராயணனுமாகவும், நானுமாவும், நீயுமாகும், என்பதும் சாஸ்திரம் தான். காளை சேராக்காராம்பசுவிற்குகளையில்லா அருகம்புல் பேய்த்து, அல்லியில்லாக் குளத்தாமரையிலையில் அதன் சாணத்தைத்தாங்கி, அச்சாணத்தைச்சுத்திசெய்து, நீற்று வடிகட்டின நீரையள்ளிக்குழைத்துக்கட்டி நேரத்துப்பூசும் சைவரேயானாலும், அவன் ''ஆசாரமில்லாதவன் 'ஒழுக்கமில்லாதவன்' கண்டதைப்புசிப்போன்'' என்று சொல்லியிருப்பதும் சாஸ்திரந்தான். பதிபலிக்கவும், பாவம்போகவும், பாக்கியவான்களாகவும், பாப்பானுக்கே கொடுக்கவென்று சொல்லுவதும் சாஸ்திரந்தான். உத்தமப்பாப்பானுக்குக்கொடுக்காமல்வந்த பாப்பானுக்கெல்லாம் கொடுத்தால் உங்கள் வாழ்க்கை சுருங்கி உங்கள் பிள்ளைகுட்டிகளெல்லாம் வறுமையடைந்து நீங்களும் நரகத்திற்குபோவீர்களென்று சொன்னதும் சாஸ்திரந்தான், உத்தமமான பாப்பானாகவிருந்தாலும்அவனுக்குக் கொடுப்பதைவிட மகன் தங்கை தமக்கை அத்தை சுற்றத்தார்களுக்குக்கொடுப்பது கோடிபங்குபுண்ணியமென்று சொன்னதும் சாஸ்திரந்தான். இதொன்றுமறியாமல் பாப்பானுக்குக்கொடுத்தே பாழடையச்செய்வதும் சாஸ்திரந்தான். சர்வஆன்மாக்களும் முத்திபெற்றுய்ய கடவுள் அளித்ததும் சாஸ்திரந்தான். சர்வஜீவர்களிடத்தும் கடவுள் புகுந்துகொண்டிருக்கிறார் என்பதும் சாஸ்திரந்தான். கடவுள் வீடான கோவிலில் எல்லாரும் புகக்கூடாதென்பதும் சாஸ்திரந்தான். எத்தனைபடித்துப்பக்குவம் வந்த தமிழ்ப்பண்டிதனானாலும் அடிமைதான் தாசிமகன்தான் என்பதும் சாஸ்திரந்தான். கடவுளைக்கட்டித்தழுவின எந்தப்பெரிய பக்திமானானாலும் அக்கினியில் முழுகிப் பாப்பானாக வராவிட்டால் மோக்ஷம் வராதென்பதும் சாஸ்திரந்தான். பெரியவயதுடைய அப்பரை ''என்னப்பன் என்னைப்பாடினன்'' என்று அணைத்துக்கொண்ட சிவபெருமான் அப்பர்கண்ணைப்பொட்டையாக்கி அருகிலிருந்த சிறுவயதுப்பாப்பான் சிவபெருமானைக்காட்டக் கண்தெரிந்தது என்பதும் சாஸ்திரந்தான். ஆதிசங்கராச்சாரிக்கு காசியில் காசி விஸ்வநாதர் பறையனாக வந்து ஞானம் உபதேசித்தார் என்பதும் 'பேரூர் சிவபெருமான் சுந்தரரைக்கண்டதும், பள்ளர்வீட்டில் ஒளிந்துகொண்டார் என்பதும் சாஸ்திரந்தான். பாப்பார்களுக்கிருப்பதுபோல பாப்பாரப்பெண்களுக்கும் பூரித்தகூனை வாங்கிக்கொள்ளச் சொன்னதும், அதற்கு தேவிபாகவதம் பிரமாணமானதும் சாஸ்திரந்தான். சிவவேடமணிந்தபாப்பானுக்குப் பெண்ஜாதியைக்கொடுத்துவிட்டவனுக்கே அகப்பற்று நீங்குமென்பதும், தான்வந்தவூரில் பெண்துணையில்லாது பாப்பான்படுத்திருந்தால் அந்த வூருக்கே பாவம்வந்துவிடுமென்பதும், மலையாளத்தில் நம்பூதரிப்பான் கோவிலில் கண்டபெண்களையெல்லாம் பெண்ஜாதிகளாக்கிக்கொள்ளலாமென்பதும்சாஸ்திரந்தான். தபசுசெய்கிறவர்களின் தவசைக்கெடுக்க அவர்கள் பெண்ஜாதிகளின் கற்பை அழிக்க தேவேந்திரனே கடவுள்களோவருவதும் சாஸ்திரந்தான். மாமிசமுண்டால் பாவமென்பதும்சாஸ்திரந்தான். ஸ்ராத்தத்திற்குமதுமாம்சங்களால் பிதிர்க்களைத்திருப்திசெய்யாவிட்டால் நரகம்வந்துவிடுமென்பதும் சாஸ்திரந்திரந்தான். ஓடும்வைகைத்தண்ணீரில் முன்னேறிவந்ததும்எரியும்நெருப்பில்எரியாமலிருந்ததாகச்சொல்லுவதும் நமது சாஸ்திரந்தான். வேகும்சொல்லரித்துப்போனதாகச்சொல்லுவதும நமது சாஸ்திரந்தான். இத்தனைக்கும் இன்னும்மனோகதிற்கும் மிடங்கொடுக்கும் நம்முடையசாஸ்திரத்தில் புரட்டு இல்லாமல் எப்படி இருக்கமுடியும்? எதில் எதுசரி? பக்குவாபக்குவம்? இனியும்பண்டிதர்களுக்கு சாஸ்திரப்பள்ளியில் சேரவில்லையா? அந்த மாற்றத்தைக்காட்டவே 'குடிஅரசு'வந்திருக்கிறது.

சாஸ்திரங்களுக்கும் அதன் கற்பனைக்கதைகளுக்கும் தலைகுனிந்து பலதலைமுறையாய் ஒழுக்கப்பட்டுவிட்டமையால் நமது அறிவின்பண்டிதப்படிப்பு மௌடீகத்திலேயே கொண்டுபோய்ச்சேர்த்துவிடுகிறது. மதம்வேறு, குருக்கள்கட்டுப்பாடு வேறு, என்பதைப்பண்டிதர்கள் மறந்துவிடுகிறார்கள். கட்டுப்பாட்டை சமயமென்றெண்ணுகிறார்கள். சமயம்விடுதலையையேபோதிக்கும். குருக்கள்கட்டுப்பாடு அடிமைநிலையைப்புகழ்ந்துபாடும். குருக்கள்கட்டுப்பாட்டின் வழியே நடந்தால்தான் சமயத்தின் உண்மைவிளங்கி பலனுண்டாகுமென்றுபோதிக்கும் நூல்களும், குருக்கள்கட்டுப்பாட்டால்வரும் நன்மையைத்தவர்கள் அடைய குருக்கள்கட்டுப்பாட்டையும்சமயத்தையும் ஒன்றாய் இணைத்துத் தொகுத்து வைத்திருக்கும்நூல்களும், குருக்கள் கட்டுப்பாட்டை விட்டால் மதமும் போய்பலதுன்பங்களும் வந்து தேவர்களுக்கும் பிதிர்க்களுக்கும் கூடுமானால்கடவுளுக்கும்கோபம்வந்துசபித்த கதைகளைக்கட்டிவைத்தபுஸ்தகங்களுமே பண்டிதர்கள்படிப்பாயிருக்கிறதினாலும் குருக்கள்கட்டுப்பாடு ஒழியவேண்டுமென்று நாங்கள்சொல்லுகையில், 'சமயம்போய்விடும் ஜாதி போய்விடும், கடவுளுக்கு ஆபத்துவந்துவிடும்' என்று குருக்கள்பாசாங்குசெய்வதினாலும், நீங்கள் குடிஅரசைக்கோபிக்கிறீர்கள். நம்முடையசமயம் அவ்வளவு கேவலமுடையதல்லவென்பதை நாங்கள் தெரிந்தஅளவுகூட பண்டிதர்களான நீங்கள் தெரியவில்லையாஎன்று கேட்பது பந்தியல்லவே. குருக்களுடைய கட்டுப்பாட்டை ஓட்டிவிட்டால் சமயமும்பிரகாசிக்கும், கடவுளும் நமது கண்ணுக்குத்தெரியுமென்பதை நீங்கள் அறியவேண்டும். 'உங்கள்மதத்திலுள்ள வைதீககொடுமைகளை எடுத்துவிட்டால் உங்கள் மதமே உயர்ந்தது,' என்றார் சுவாமிவிவேகாநந்தரும்.


தொடரும்.

## தீபாவளியன்று ஒரு பெரியாரின் தொண்டு.

கொட்டாம் பட்டியில் சுயமரியாதை வீரர் திருவாளர் பத்மநாத நாயுடுகார் அவர்கள் ஆதிதிராவிட ஏழைக்குழந்தைகளுக்கு தீபாவளியாகிய 11—11—28 ஞாயற்றுக் கிழமை காலையில் சுமார் நூறுகுழந்தைகள் வரையிலும்எண்ணெய்சிகைக்காய் கொடுத்து தலை முழுகும்படி செய்து சிற்றுண்டியும் உடையும் அளித்தது புகழத்தக்கது. ஆதிதிராவிடமுன்னேற்றத்தைக் கருதும் அன்பர்கள் தீபாவளி முதலிய விசேஷ தினங்களில் வீண் செலவுகள் செய்யாமல் பழய மூட வழக்கங்களை ஒழித்து நம்முடைய ஆதிதிராவிடர் முதலிய சமுகங்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களில்செலவழிப்பார்களானால் கூடிய சீக்கிரம் நமதுபிராமணரல்லாதார் சமூகமும் நமது தேசமும் முன்னேற்றமடையுமென்பதை சுயமரியாதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,

சுயமரியாதைத் தொண்டன்.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.




இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்தரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை ,, 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R.

நிமிஷக்கணக்கில் குணம் அடைவதை விட்டு என் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சரியநிவர்த்தி!!

## சுவாசகாச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர்.

நீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சகலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0.

பு. மா. சொக்கலிங்க முதலியார், புரோப்ரைட்டர்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)



சுயமரியாதை பெறவேண்டுமானால்
"குடி அரசு" திராவிடன்
பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்



## விலாசம் தேவை.

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பரவச முதிர்ச்சி, புது மயக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், "ரகஸ்ய ரத்னம்" என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்-

அமிர்தம் அண்டு கோ.,
தபாற்பெட்டி 222,
மதராஸ்.



## திருக்குறள்.

மூலமும் உரையும் | நீங்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால் **திருக்குறளை வாங்கிப் படியுங்கள்.** | விலை அணா 4

திருக்குறள் ஒரு குலத்துக்கொரு நீதிபோதியாமல் மக்கள் யாவரும் சமம் என்று செப்புகின்றது.

எங்கள் திருக்குறள் உரை, தமிழ்நெறிபற்றி வெகு தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

பதம்பிரித்த மூலமும் அதற்கிணங்கிய பொழிப்புரையும்.

நான்கு அணாவிற்கு முன்னூற்றுக்கு மேற்பட்ட பக்கங்கள்.

வெகு குறைந்த விலை! மிக நல்ல உரை!
சுத்தமான பதிப்பு! கிளேஸ் காகிதம்! மிகதூய தமிழ்!

வெகு சொற்ப பிரதிகளே அச்சிடப்பெறுகின்றன. நவம்பர்-மீ 30உக்குள் தபால் செலவு 0—1—6 சேர்த்து 0—5—6 தபால் பில்லைகளை அனுப்புவோர்க்கே மேற்குறித்த விலை. பிறகு பிரதி ஒன்றுக்கு 8 அணா விலை, தபால செலவும் வேறு. குறித்த அளவிற்கு மேல் ஆர்டர் வந்தால் ஸ்டாம்புகளைத் திருப்பி அனுப்பிவிடுவோம், ஆகையால் இன்றே ஆர்டர்செய்ய முந்துங்கள். பிறகு வருந்துவதில் பயனில்லை.

பொங்கல் புதுநாளன்று புத்தகங்களைப் பெறுவீர்கள்.

தமிழ் நூற்பதிப்பு கழகம், காஞ்சீபுரம்



80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

## அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

(V. 120) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

## "தெய்வீகன்"

நந்த, மலய, சுருதி மன்னர் என்னும் முப்பிரிவினையுடைய பார்க்கவ குலத்தினர் நலங்கருதி உழைக்கும் மாதத்தாள். புத்தக அளவில், நாற்பது பக்கங்களில், பல அரிய பொருள்கொண்டு மிளிர்வது.

மார்கழி முதல்நாள்தொட்டு திங்கள்தோறும் திகழ்வது.

வருட சந்தா ரூ. 2—0—0

ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார்,

விலாசம்:— "தெய்வீகன" நிலையம்,

பொன்மலை.

---

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

## இனம்! இனம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜினான் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

## 'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் ஒரு வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0

வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,

விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

---

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.

திரௌபதை அம்மன் கோவில் வீதி

புதுச்சேரி

---

இனம்! இனம்!! இனம்!!!


## 135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துகள் இனம்.

5-வருஷம் உத்தரவாதம்] ராஜா'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5

இந்தத் தமிழ் எழுத்துகளடங்கியபெட்டி ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது. எவ்வளவில், தங்களுக்குத் தேவையான, விலாசங்கள், முதலியவைகளைத் தாங்களே அடிக்கலாம். கார்டு, கவர், லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம்— இந்தப்படத்தில் கண்டபடி அதாவது.—

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ



இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேசுகளும் பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சாரணம் 1, மை ஊற்றிய வெல்வெட் இங்கிபாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1, ஆகமொத்தம் சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5 செட் 1-க்கு விலை ரூ 5—8—0 மேல்கண்ட தமிழ் ரப்பர்எழுத்துப்பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குடி அரசு' பத்திரிகையில் கண்டதாக எழுதினால் A B C D E இம்மாதிரியான இங்கிலீஷ் எழுத்துக்களும். நம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனமாக அனுப்பப்படும்- (மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ 1—6—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு

(V100) எமது விலாசம்:— அ. ராஜு பிள்ளை அண்டு பிரதர்,

இந்தியா ரப்பர் எழுத்துத்தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை மதராஸ்.

---

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு ஒன்றுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.


ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

---

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது காலத்துக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 ருக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.